1971 அக்டோபர் 22]

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, கறி சாப்பிடுபவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு நாளும் கூடிக் கொண்டே வருகிறது. மேலும் வெள்ளாட்டின் கறி உடலுக்கு ஆரோக்கியமானது என்றும் சொல்கிறார்கள். ஆட்டிறைச்சியிலிருந்துதான் ஆயுர்வேத மருந்தான 'அஜ ரசாயனம்' தயாரிக்கப்படுகிறது. ஆகவே, அதிக அளவில் வெள்ளாடுகளை வளர்க்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இது ஆலோசனைக்குரியது.

அரசு மருத்துவர்களுக்குச் சொந்தமாக தொழில் செய்ய அனுமதி.

*19 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசாங்க மருத்துவமனைகளில் டாக்டர்களாகப் பணியாற்றுபவர்களுக்கு அதே பகுதியில் வேலை செய்த நேரம் போக மீதி நேரத்தில் சொந்த டிஸ்பென்சரி வைத்துக்கொள்ள அனுமதி அளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அரசாங்க மருத்துவ மனைகளில் டாக்டர்களாக பணியாற்றுபவர்களுக்கு அதே பகுதிகளில் அரசாங்க மருத்துவ மனைகளில் வேலை செய்த நேரம் போக மீதி நேரத்தில் சொந்தமாக டிஸ்பென்சரி வைத்துக் கொள்ள அனுமதி அளிக்கும் செயற்குறிப்பு உண்டா என்பது கேள்வி. அப்படி ஒரு செயற்குறிப்பு இல்லை.

THIRU K. M. SUBRAMANIAN : Sir, are the Government aware that in Kerala private practice by the Government doctors working in the hospitals is completely banned now?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அது கேரள மாநிலத்திலுள்ள சூழ்நிலைக்குரியதாக இருக்கலாம். அது பற்றி நாம் ஆராயவில்லை.

திரு. க. பழனிவேலன் : தலைவர் அவர்களே, அரசாங்க மருத்துவ மனைகளில் பணியாற்றுபவர்கள், மருத்துவ மனைகளில் வேலை செய்கிற நேரத்தைத் தவிர மற்ற நேரங்களில் பிரைவேட் பிராக்டீஸ் செய்ய அனுமதிக்கப்படாவிட்டாலும், பல இடங்களில் பிரைவேட் பிராக்டீஸ் செய்து கொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாக மருத்துவமனையின் சிறப்பான பணி செம்மையாக அமையவில்லை என்பது அரசு அறியுமா? அதைத் தடுக்க ஏதாவது உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அங்கத்தினர் அவர்கள் சொன்ன கருத்து முன்னரே இந்த அரசாங்கத்தால் ஆராயப்பட்டது அதில் பெருமளவு உண்மை இருக்கிறது.

அதை நிறைவேற்றுவதிலேதான் சில தொல்லைகளும் இடையூறு களும் ஏற்படுகின்றன, கிராமப்புறத்தில் ஒரு நோயாளியை உடனடியாகக் கவனித்து உதவி செய்ய வேண்டிய நிலைமை ஏற்படுமானால், அந்த நோயாளியை கவனித்து உடனடி சிகிச்சை அளிக்க முடியாத நிலைமை ஏற்படும். பிரைவேட் பிராக்டீஸ் செய்யக் கூடாது என்று தடுத்துவிட்டால் அந்த நோயாளிக்கு உடனடியான சிகிச்சை அளித்து, அவனுடைய உயிரைக் காப்பாற்றக் கூடிய நிலைமை இல்லாது போய்விடும். மருத்துவமனைக்குச் செல்ல வேண்டுமானால் ஒரு ஐந்து மைல் தொலைவாவது போக வேண்டி இருக்கும். ஆகவேதான் இப்படிப்பட்ட இக்கட்டான நிலைமை ஏற்படுகிறது. இன்றைக்கு பிரைவேட் பிராக்டிஸ் அடியோடு நிறுத்தப்பட வேண்டுமென்று சட்டம் கொண்டு வருவது முழு அளவிற்கு ஏற்றுக்கொள்ளப்படவில்லை. சில தனிப்பட்ட பொறுப்பில் உள்ளவர்கள் பிரைவேட் பிராக்டீஸ் செய்யக் கூடாது என்று தடுக்கப்பட்டிருக்கிறது. மற்றும் சில நபர்கள் ஆலோசனை மட்டும் கூறலாம் என்று அனுமதி தரப்பட்டிருக்கிறது. ஆலோசனை கூறுவதற்கும் வைத்தியம் செய்வதற்கும் வேற்றுமை காண முடியவில்லை. இது சமுதாய சிக்கலாகும். ஆகவேதான் அவ்வப்பொழுது ஏற்படுகின்ற நிலைமைகளைக் கவனித்து அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. க. நாகராஜன்: தலைவர் அவர்களே, அரசுப் பணியாளர்கள், என்ஜினியர்கள், வழக்கறிஞர்கள் ஆகியோர் தனிப்பட்ட முறையில் கன்சல்டிங் நடத்தக் கூடாது என்று தடை இருக்கும் போது, டாக்டர்களுக்கு மட்டும், அதுவும் நகரங்களிலுள்ள டாக்டர்களுக்கு அரசு ஏன் சலுகை காட்ட வேண்டும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, நான் முன்னரே சொன்னது போல இது ஒரு சமுதாயப் பிரச்சினையாக இருக்கிறது. தகுதியே இல்லாத பல கிராமப்புறங்களில் மருத்துவம் செய்கிறார்கள். தகுதியே பெறாமல் தாங்களாகவே கன்சல்டிங் டாக்டர்களாக இருக்கிறார்கள். இதுகுறித்து அகில இந்திய சுகாதார அமைச்சர் மாநாட்டில் ஆலோசிக்கப்பட்டது. பிரைவேட் கன்சல்டிங் நடத்துவதை உடனடியாகத் தடை செய்துவிட்டால் கிராமப்புறங்களிலுள்ள மக்களுக்கு அதிகமான கஷ்டங்கள் நேரிடும். பட்டம் பெற்றவர்களின் அதிகப்படியான சேவை கிடைக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்ய வேண்டும். இப்பொழுது கிராமப்புற மக்களுக்குக் கிடைக்கக் கூடிய சிறு உதவியை உடனடியாக நிறுத்திவிட வேண்டாம் என்று கூறப்பட்டது. ஏற்கெனவே ஆந்திர மாநிலத்தில் பிரைவேட் பிராக்டீஸ் செய்யக் கூடாது என்கிற ஒரு தடை விதிக்கப்பட்டு, அந்தத் தடை முழு அளவிற்கு மீறப்பட்ட காரணத்தால், அந்தத் தடையையே அகற்றிவிட்டனர். நமக்கு வேண்டிய நல்லதொரு சூழ்நிலையை ஏற்படுத்திக் கொண்ட பின்னர் தடை செய்யலாம் என்று அரசு கருதியிருக்கிறது.

1971 அக்டோபர் 22]

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, கிராமப்புறங்களிலே அரசாங்க மருத்துவமனை இல்லாததன் காரணமாக, கிராமப்புறங்களில் இருக்கும் டாக்டர்களை பிரைவேட் பிராக்டிஸ் செய்ய அரசாங்கம் அனுமதி அளிக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அப்படிச் செய்வதற்கு அரசாங்கம் அனுமதி அளிக்குமா, இல்லையா என்பது அல்ல. அப்படி அனுமதி அளிக்கின்ற காரணத்தால் அரசாங்கம் அடியோடு தடைப்படுத்தும் எண்ணம் இல்லை என்பதல்ல. சில இடங்களில் நாட்டிலே விதிமுறைகள் மீறப்படுகின்றன. நாட்டின் தேவையை நிறைவேற்றுகின்ற வகையிலே சில விதிமுறைகள் நிறைவேற்றப்படுகின்றன. ஒரு சட்டம் மீறப்படாத வகையில் நிறைவேற்றுகின்ற சூழ்நிலையை உருவாக்க விதிமுறைகளைச் செய்வதுதான் ஒரு நல்ல அரசாங்கத்தின் கடமையாகும். அதை இப்பொழுது செய்து வருகிறோம்.

திரு. கோவை செழியன் : தலைவர் அவர்களே, படித்துப் பட்டம் பெற்ற பல டாக்டர்கள் அரசாங்க உத்தியோகத்தில் இருந்து கொண்டு தனிப்பட்ட முறையிலே பயிற்சி செய்து வருகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் ஏழைஎளியமக்கள் இருக்கின்ற இடங்களில், தங்களிடம் வரும் நோயாளிகளுக்கு அரசாங்க மருந்துகளைக் கொடுத்தும், நோயாளிகளை தாங்கள் பணியாற்றும் மருத்துவ மனைகளில் சேர்த்து சிகிச்சை அளித்தும் பணம் பெற்று வருகிறார்கள். அதனால் எல்லோரும் அந்த டாக்டரிடமே செல்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட காரியங்களைத் தடுப்பதற்காகவாவது அரசு ஒரு தடையை ஏற்படுத்த உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அதுபற்றி விளக்க விரும்புகிறேன். ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்ட விதியிலே கன்சல்டிங் பிராக்டிஸ் என்று விதி இருக்கிறது. கன்சல்டிங் பிராக்டிஸ் என்பது,

'shall mean examination of patients brought or introduced by a registered medical practitioner and operation in a place other than the Government institution with the intervention of the registered medical practitioner, scrutiny of medical certificates for policies in L.I.C. and issue of certificates to persons examined or treated in his official capacity.'

என்று விளக்கம் இருக்கிறது. ஏதோ ஒரு வகையில் இதைச் செயல்படுத்துகிறார்கள். இதை அடியோடு கண்காணித்து நிறைவேற்றுகின்ற, சட்டத்தை அமலாக்கக்கூடிய காரியம் எளிது அல்ல. தனியார் துறையில் பணியாற்றக் கூடிய டாக்டர்களின் எண்ணிக்கை அதிகமானால் இது தானாகவே நின்றுவிடும். நாமும் இம்மாதிரி செய்வதை தடுத்து நிறுத்திவிடலாம்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவர் அவர்களே, சில ஆஸ்பத்திரிகளில் ஆனரரி சர்ஜன்கள் இருக்கிறார்கள். அவர்கள் சில நோயாளிகளுக்குக் கன்சல்டிங் செய்துவிட்டு, அவர்களை தாங்கள் பணியாற்றுகிற ஆஸ்பத்திரிகளில் அட்மிட் செய்துவிட்டு, அவர்களிடமிருந்து

[1971 அக்டோபர் 22

பணம் பெற்றுக்கொள்கிறார்கள். இம்மாதிரி ஆனரரி சர்ஜன்கள் செய்வதை அரசாங்கம் தடுத்து நிறுத்த முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இதுகூட தனிக் கேள்விக்கு உரியதுதான். நான் விளக்கம் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆஸ்பத்திரிகளில் சிறப்பு டாக்டர்கள்—ஆனரரி சர்ஜன்கள்—இருக்கிறார்கள். ஏதாவது ஒரு துறையில் சிறப்புத் தகுதி பெற்றிருக்கிறார்கள். ஒவ்வொரு துறையிலும் சிறப்புத் தகுதி பெற்றவர்களை கௌரவ டாக்டர்களாக நியமிக்கிறோம். ஒருவர் அறுவை சிகிச்சையிலே தகுதி பெற்றிருக்கலாம், ஒருவர் குழந்தை மருத்துவத்திலே தகுதி பெற்றிருக்கலாம், ஒருவர் தாய்-சேய் நல மருத்துவத்தில் சிறப்புத் தகுதி பெற்றிருக்கலாம். அப்படிப்பட்டவர்களாலே ஒருசில குறைகள் இருந்தாலும், அவர்களாலே பலருக்கு நன்மை கிடைக்கிறது. அவர்களுடைய போக்கு தானாக மாறிவிடும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

அரசுப் பணிகளில் கலப்புத் திருமணத் தம்பதிகளின் குழந்தைகளுக்கு முதலிடம்

*** 20 வினா—திரு. எம். முத்தையா :** மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகள் குழந்தைகளுக்கு அரசாங்க அலுவலகங்களில் உத்தியோகத் துறையில் முதலிடம் கொடுக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இல்லை.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, கலப்புத் திருமணம் செய்துகொண்ட தம்பதிகளின் குழந்தைகளுக்கு அரசாங்க உத்தியோகத்தில் முதலிடம் தரப்படுமா? அப்படி முதலிடம் தருவதன் மூலம் நாட்டிலே கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களின் எண்ணிக்கை அதிகமாகி, சாதி சமயங்கள் எல்லாம் குறையும். ஆகவே, கலப்புத் திருமணத் தம்பதிகளின் குழந்தைகளுக்கு அரசாங்க உத்தியோகத்தில் முதலிடம் தரப்படும் என்பதைச் செய்வதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, கலப்புத் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று சொல்பவர்கள்கூட கலப்புத்திருமணம் செய்துகொள்ள முன்வருவதில்லை. அவர்கள் கலப்புத் திருமணம் செய்துகொண்டதற்குப் பின்னர்தான் அவர்களுடைய குழந்தைகளுக்கு உத்தியோகம் அளிப்பது பற்றி கவனிக்கவேண்டும். இப்போது கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு தங்கப் பதக்கம் கொடுக்கிறோம். 'நாங்கள் கலப்புத் திருமணம் செய்துகொண்டோம்'